**செய்தி வெளியீடு எண்: 844 நாள்: 28.11.2019**

**<u>இன்று (28.11.2019), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திருப்பத்தூரில் நடைபெற்ற விழாவில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட திருப்பத்தூர் மாவட்டத்தினைத் தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை உருவாக்க வேண்டுமென்ற இந்தப் பகுதி மக்கள் மற்றும் மாவட்ட அமைச்சர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, இன்றைக்கு வேலூர் மாவட்டத்திலிருந்து பிரித்து புதியதாக திருப்பத்தூர் மாவட்டம் தொடங்கப்பட்டுள்ளது. சமீபத்தில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலின்போதும் இது சம்பந்தமாக பல தரப்பினரிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்தன. அதனை பரிசீலனை செய்வதாக நான் அப்போது தெரிவித்திருந்தேன்.

அதன்பின் மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த தொடர் நடவடிக்கைகளின் விளைவாக, நான் கடந்த சுதந்திர தின விழா உரையில், திருப்பத்தூர் மாவட்டம் புதிதாக உருவாக்கப்படும் என்று அறிவித்ததற்கிணங்க, இன்று இம்மாவட்டம் உதயமாகி உள்ளது என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய வேளையில், புதிய மாவட்டத்தின் சிறப்பு அம்சங்கள் சிலவற்றைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.

ஆதியூர் முதல் கோடியூர் வரை 8 திசைகளில் 10 திருத்தலங்கள் இருந்ததால் “திருப்பத்தூர்'' என்று பெயர் வந்தது என்றும், திருப்பத்தூரை பல மன்னர்கள் ஆண்ட காலத்தில் பிரம்மபுரம், திருப்பேரூர், திருவனபுரம் என பல பெயர்களில் திருப்பத்தூர் அழைக்கப்பட்டது என்றும், 14ஆம் நூற்றாண்டில் விஜயநகர மன்னர்கள் திருவனபுரம் என்ற பெயரை திருப்பத்தூர் என்று மாற்றி உள்ளதாகவும் ஒரு ஆராய்ச்சி தகவல் கூறுகிறது. திருப்பத்தூர் நகரம் ஜவ்வாது மலை, ஏலகிரி மலை என இரண்டு பெரிய மலைகளால் சூழப்பட்ட பகுதி ஆகும். ஜவ்வாது மலை, இயற்கை எழில் கொஞ்சும் அருவிகள், நீரோடைகள், காடுகள் என காண்போரை மெய் சிலிர்க்க வைக்கும் ரம்மியமான மலையாகும். இம்மலையின் பீமன் அருவியும், அமிர்தி உயிரியல் பூங்காவும் சுற்றுலாத் தலங்களாக விளங்குகிறது.

ஜவ்வாது மலையில் இருந்து செய்யாறு, ஆரணியாறு, கமண்டல நாகநதி ஆறு, மிருகண்டா நதி ஆகிய ஆறுகள் உற்பத்தியாகின்றன. இம்மலைவாழ் மக்களில் பெரும்பாலானவர்கள் மலையாளி என்ற பழங்குடி இனத்தவர்கள் ஆவர். இவர்களது முக்கியத் தொழில் வேளாண்மை ஆகும். இம்மலை மிகச் சிறந்த சந்தன மரங்கள் விளையும் பூமி. இதனால் ஆசியாவிலேயே 2வது பெரிய சந்தனக் கிடங்கு திருப்பத்தூரில் அமைக்கப்பட்டது. சந்தனம் விளையும் ஜவ்வாது மலையை ஒட்டி அமைந்துள்ளதாலும், பெரிய சந்தனக் கிடங்கு உள்ளதாலும் திருப்பத்தூரை 'சந்தன மாநகர்' என அழைக்கப்படுவதும் உண்டு.

இம்மாவட்டத்திலுள்ள ஆம்பூர் நகரில் தயாரிக்கப்படும் "பிரியாணி" உலகப் பிரசித்தி பெற்றது. இங்கு தோல் தொழிற்சாலைகள் அதிகம் அமையப் பெற்று, அந்நியச் செலாவணி அதிகம் ஈட்டித் தருவதோடு மட்டுமல்லாமல், இங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பையும் அளித்து வருகிறது.

ஜோலார்பேட்டை ரயில் நிலையம், திருவனந்தபுரம், பெங்களூர், மும்பை போன்ற நகரங்களை இணைக்கும் முக்கிய சந்திப்பாக விளங்குகிறது.

ஆங்கிலேயர் ஆட்சியில், 1790ஆம் ஆண்டிலேயே திருப்பத்தூர் மாவட்டம் உருவாக்கப்பட்டு, அதன் முதல் ஆட்சித் தலைவராக கிண்டர்ஸ்லே அவர்கள் நியமிக்கப்பட்டு, 3.4.1792 வரை அப்பொறுப்பில் இருந்தார்.

அதன் பின்னர் ஒருங்கிணைந்த சேலம் மாவட்டம் உருவாக்கப்பட்டு, அதன் தலைநகராக திருப்பத்தூர் இருந்தது. ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட கலெக்டர் அலுவலகம், இன்று ரயில்வே நிலையமாக உள்ளது.

கால மாற்றத்தில் சேலம் மாவட்டம், சித்தூர் மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம் ஆகிய மாவட்டங்களின் ஒரு பகுதியாக இருந்த திருப்பத்தூர், இன்று மாண்புமிகு அம்மாவின் அரசால், ஒரு புதிய மாவட்டமாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், ஆற்காட்டிலிருந்து மைசூருக்குச் சென்ற ஆங்கிலப் படைகள், வழியில் திருப்பத்தூர் சென்றடைந்தது. அங்கு அவர்கள் தாகம் தணிக்க பொது கிணற்றை நாடியுள்ளனர். ஆனால், தாய் மண்ணின் மீதிருந்த பற்றாலும், ஆங்கிலேயர் மீது இருந்த வெறுப்பு உணர்வாலும், அவர்களுக்கு தண்ணீர் மற்றும் உணவுப் பொருட்களை அளிக்க மறுத்துவிட்டதோடு மட்டுமல்லாமல், இரவில் ஆங்கிலப் படைகள் செல்லும் பாதையில் கற்களையும், மரங்களையும் வெட்டிப் போட்டு எதிர்ப்பு தெரிவித்த தேசப்பற்றுமிக்க மக்கள் வாழும் மாவட்டம்தான் திருப்பத்தூர் மாவட்டமாகும்.

இந்த இனிய வேளையில் திருப்பத்தூர் மாவட்டத்தை பற்றிய சில நிர்வாக செய்திகளையும் குறிப்பிட விரும்புகிறேன்:-

இன்று உருவாகியுள்ள திருப்பத்தூர் மாவட்டத்தின் தலைநகரம், திருப்பத்தூர் நகரம். மாவட்டத்தின் பரப்பளவு 1798 சதுர கிலோ மீட்டர். மாவட்டத்தின் மக்கள் தொகை 11 லட்சத்து 11 ஆயிரத்து 812 ஆகும்.

வருவாய் நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில், திருப்பத்தூர் மற்றும் வாணியம்படி என இரண்டு வருவாய் கோட்டங்களும், திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர், நாட்ராம்பள்ளி ஆகிய 4 வட்டங்களும், 15 உள் வட்டங்களும், 195 வருவாய் கிராமங்களும் இம்மாவட்டத்தில் உள்ளன.

உள்ளாட்சி நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில், ஆம்பூர், திருப்பத்தூர், வாணியம்பாடி, ஜோலார்பேட்டை என நான்கு நகராட்சிகளும், நாட்ராம்பள்ளி, திருப்பத்தூர் உட்பட 7 ஊராட்சி ஒன்றியங்களும், ஆலங்காயம், நாட்ராம்பள்ளி மற்றும் உதயேந்திரம் என 3 பேரூராட்சிகளும், 207 கிராம ஊராட்சிகளும் உள்ளன. இத்தருணத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலையும் விரைவில் மாண்புமிகு அம்மாவின் அரசு நடத்த இருக்கிறது என்ற தகவலை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

புதியதாக மாவட்டங்கள் உருவாக்கப்படுவதற்கும், உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படுவதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. ஆனால் வேண்டுமென்றே திட்டமிட்டு எதிர்க்கட்சித் தலைவர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு புதிய மாவட்டங்கள் தோற்றுவிக்கப்பட்ட காரணத்தினால் உள்ளாட்சி தேர்தல் நடைபெறாது என்ற ஒரு பொய்யான கருத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், அது தவறு. 2018–ஆம் ஆண்டில் ஏற்கனவே புதியதாக மறுவரையறை செய்யப்பட்டு வெளியிடப்பட்ட வார்டுகளின் அடிப்படையிலேயே தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் உள்ளாட்சித் தேர்தல் விரைவில் நடத்தப்படும் என தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

பொதுவாக பெரும்பாலான இடங்களில் அரசு அலுவலகங்கள், பல்வேறு பகுதிகளில் இயங்கும். இதனால் பொதுமக்கள் சிரமத்திற்கு உள்ளாவார்கள். பொதுமக்கள் சிரமப்படாமல் அரசு அலுவலகங்களை நாடுவதற்கு வகை செய்யும் வண்ணம், திருப்பத்தூரில் மட்டும் அனைத்து அரசு அலுவலகங்களும் திருப்பத்தூர் மெயின் ரோட்டை ஒட்டியவாறு 20 ஏக்கர் பரப்பளவில் ஒரே இடத்தில் அமைத்துத் தரப்படும்.

திருப்பத்தூரில் அமைந்துள்ள பிரம்மேஸ்வரர் கோயில், ஆம்பூரில் உள்ள ஆஞ்சநேயர் கோயில் ஆகியவை இம்மாவட்டத்தில் பிரபலமான திருக்கோயில்கள் ஆகும். இம்மாவட்டத்தில் ஆம்பூர் மற்றும் வாணியம்படி பகுதிகளில் ஏராளமான பள்ளிவாசல்கள் உள்ளன.

பொதுவாக 'ஏழைகளின் ஊட்டி' என்று அழைக்கப்படும் ஏலகிரி மலை திருப்பத்தூரிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இயற்கை எழில் கொஞ்சும் இந்த ஏலகிரி மலை கடல் மட்டத்திலிருந்து 1,700 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இது ஒரு முக்கிய கோடை வாசஸ்தலமாக விளங்கி சுற்றுலாப் பயணிகளை மிகவும் ஈர்க்கின்றது. அதே போல ஏலகிரி மலையில் உள்ள ஜலகாம்பாறை அருவி, பூங்கனூர் ஏரி, சிறுவர் பூங்கா ஆகியவை சுற்றுலா பயணிகளை கவரும் இடங்களாக திகழ்கின்றன.

திருப்பத்தூர் ஜவ்வாது மலையில் அமைந்துள்ள காவலூர் விண்வெளி ஆராய்ச்சி மையம் திருப்பத்தூருக்கு பெருமை சேர்க்கிறது. தெற்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய விண்வெளி ஆராய்ச்சி மையம், 100 ஏக்கர் நிலப்பரப்பில், விஞ்ஞானி வைனு–பப்பு பெயரில் செயல்பட்டு வருகிறது. பல்வேறு அறிஞர்கள் படித்த மற்றும் பணியாற்றிய இஸ்லாமிய கல்லூரி இந்த மாவட்டத்தில்தான் உள்ளது. இது போன்று எண்ணற்ற சிறப்புகளை உள்ளடக்கியது இந்த மாவட்டமாகும்.

புதியதாக திருப்பத்தூர் மாவட்டம் தொடங்கப்படுவதனால், இப்பகுதியில் முக்கியத் தொழிலான வேளாண்மை, தோல் தொழிற்சாலைகள் தவிர, பிற தொழில்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். ஆகையால், இப்பகுதி மென்மேலும் வளர்ச்சி அடையும். மொத்தத்தில் இம்மாவட்டம் ஏனைய மாவட்டங்களுக்கு இணையாக எல்லா வளமும், வளர்ச்சியும் பெற்று முதன்மை மாவட்டமாக உயரும் என்று நான் உறுதிபடக் கூறுகிறேன். இதற்கு அம்மாவின் அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

9.9.2017 அன்று நடைபெற்ற எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் வாணியம்பாடி வட்டத்தில் அமைந்துள்ள ஆண்டியப்பனூர் ஓடை நீர்தேக்க அணையை சுற்றுலாப் பயணிகளும், பொதுமக்களும் கண்டு களித்திடும் வகையில் சுற்றுலாத் தலமாக மேம்பாடு செய்யப்படும் என நான் அறிவித்தேன். எனது அறிவிப்பிற்கிணங்க, இந்தப் பகுதியை சுற்றுலாத் தலமாக மேம்படுத்திட 1 கோடியே 30 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை இந்தத் தருணத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆம்பூர் நகராட்சி 24.32 எம்.எல்.டி. குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, 31.10.2019 அன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், திருப்பத்தூர் மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக, வெலக்கல்நத்தம் சாலை மேம்பாலம் 23.45 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், நாட்ராம்பள்ளி சாலை தாமலேரிமுத்தூர் சாலை மேம்பாலம் 16.38 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், கட்டப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த 2011 முதல் 2018 வரை 747 கி.மீ. நீளச் சாலைகள் மற்றும் 56 பாலப் பணிகள் 468 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டிற்கு கொண்டு வந்த அரசு

அம்மாவின் அரசு. நடப்பாண்டில் **246** கி.மீ. நீள சாலைகள் மற்றும் **40** பாலப் பணிகள் **550** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

பொதுப் பணித் துறையின் சார்பில், குடிமராமத்து திட்டத்தின் கீழ் **26** ஏரிகள், சுமார் **4** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு அம்மாவின் அரசால் புனரமைக்கப்பட்டுள்ளன. **13**வது நிதிக்குழு திட்டத்தின் கீழ், **1.71** கோடி ரூபாய் செலவில் **7** ஏரிகள் புனரமைக்கும் பணிகளும், **3.06** கோடி ரூபாய் செலவில் **8** ஏரிகள் புதுப்பிக்கும் பணிகளும் நடைபெற்றுள்ளன. இது தவிர, நபார்டு திட்டத்தின் கீழ் **2.48** கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மகப்பேறு மற்றும் குழந்தை நல மருத்துவத்தில் அதிக அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, **18** கோடி ரூபாய் செலவில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில், மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தை பராமரிப்பு மையத்தை ஒப்புயர்வு மையமாக தரம் உயர்த்தும் பணிகளும், **4** கோடி ரூபாய் மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை மையம் அமைக்கும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கிராமம் மற்றும் நகர்ப்புரங்களில் உள்ள மகளிர் மேம்பாட்டினை கருத்தில் கொண்டு, இம்மாவட்டத்தில் **6,500** மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு **2011** முதல் இது வரை **688** கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டதைப் போலவும், அந்தக் குழுக்களுக்கு அதிகக் கடன் கொடுத்த அரசு திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்பது போலவும் பொய்யான தகவலை தமிழகம் முழுவதும் செல்லும் இடங்களில் எல்லாம் பரப்பி வருகிறார். ஆனால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே கிராமங்கள் மற்றும் நகரங்களில் உள்ள ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்களை ஒரு குழுவாக அமைத்து சுய உதவிக் குழு ஏற்படுத்தப்பட்டு, அக்குழுக்களுக்கு கேட்கின்ற அளவிற்கு நிதியைக் கொடுத்து சுயமாகத் தொழில் தொடங்கி, அவர்கள் சொந்தக் காலில் நிற்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்த அரசு அம்மாவின் அரசு என்பதை நாங்கள் நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றோம். அதன் விளைவாக, **2011**–ஆம் ஆண்டு முதல் இன்று வரை சுமார் **688** கோடி ரூபாய் **இந்த மாவட்டத்தில் மட்டும்** சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக வழங்கியிருக்கின்றோம்.

**2016**–ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத் தேர்தலிலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில், மாண்புமிகு அம்மா அவர்கள், நான் மீண்டும் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் மானிய

விலையில் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பை கொடுத்தார்கள். ஆனால், அம்மா அவர்கள் மறைந்தாலும், அம்மா அவர்கள் வழியில் நடைபெறும் எங்களின் அரசு அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் 2,269 உழைக்கும் மகளிருக்கு 5.68 கோடி ரூபாய் மானியம் வழங்கி திட்டத்தை நிறைவேற்றிய அரசு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாவட்டத்தில் ஏழை, எளிய விவசாய பெருமக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்த, விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த 8 ஆண்டுகளில் 1,805 பயனாளிகளுக்கு 7.76 கோடி ரூபாய் செலவில் கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. அதே போல், 22,638 பயனாளிகளுக்கு 29.69 கோடி ரூபாய் செலவில் விலையில்லா வெள்ளாடு / செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டு மக்கள் பயன் அடைந்துள்ளனர். அம்மா அவர்கள் அறிவித்த அனைத்து திட்டங்களையும் சிந்தாமல், சிதறாமல் மக்களுக்குக் கொடுத்து, ஏழை, எளிய மக்களை பொருளாதார மேம்பாடு அடையச் செய்கின்ற ஒரே அரசு அம்மாவின் அரசு.

கடந்த 8 ஆண்டுகளில், கே.வி.கொரட்டி, வாணியம்பாடி, நாட்றம்பள்ளி, மட்றம்பள்ளி, கந்தலி, ஜோலார்பேட்டை, உதயேந்திரம், பள்ளிகொண்டா ஆகிய பகுதிகளில் சுமார் 62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு, தடையில்லா மின்சாரம் மாண்புமிகு அம்மாவின் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு விவசாயியான நான் முதலமைச்சராக உள்ள நிலையில், வேளாண் துறையில் நான் முன் எடுத்த திட்டங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்:-

நாட்டின் வளர்ச்சிக்கு தங்குதடையில்லாத மின்சாரம் மிகவும் முக்கியம். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011–ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில், நான் முதலமைச்சராக பொறுப்பேற்று, மூன்றே ஆண்டுகளில் தடையில்லா மின்சாரம் கொடுத்து, தமிழகத்தை மின்வெட்டு இல்லாத மாநிலமாக உருவாக்கிக் காட்டுவேன் என்று அறிவித்ததுடன், சட்டமன்றத்திலும் சூளுரைத்தார்கள். அதேபோல, மூன்றே ஆண்டுகளில் தடையில்லா மின்சாரம் வழங்கி, இன்றைக்கு நாட்டில் தொழில் வளம் பெருகவும், பொதுமக்களுக்குத் தேவையான மின்சாரத்தைக் கொடுத்த ஒரே அரசு அம்மவினுடைய அரசு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 8 ஆண்டுகளில் ஆறாவது முறையாக மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி 100 லட்சம் மெட்ரிக் டன்னை தாண்டி சாதனை படைத்துள்ளது. இதன் காரணமாக 2011–12 ஆம் ஆண்டு முதல் 2017–18 ஆம் ஆண்டு வரை, மாண்புமிகு அம்மாவின் அரசு வேளாண்மைத் துறையில் 5 முறை தேசிய விருதான “கிருஷி கர்மான்'' விருதினை பெற்று சாதனை படைத்து, வேளாண்மைத் துறையில் முத்திரை பதித்துள்ளது.

பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், புதிய பயிர்களையும், பகுதிகளையும் அறிவிக்கை செய்து, இத்திட்டம் கூடுதல் பரப்பளவில், அதிக வேளாண் பெருமக்கள் பயன் பெறும் வகையில், இந்த ஆண்டு 634 கோடியே 74 லட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகிறது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு வேளாண் பெருமக்களுக்காக 7 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீட்டு நிதியாக இந்தியாவிலேயே அதிகமாக பெற்றுத் தந்த அரசும் எங்களுடைய அரசு தான்.

2018–ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில் அமெரிக்கன் படைப்புழுவின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்காச்சோளப் பயிர்களை பாதுகாக்க அம்மாவின் அரசு உடனடி நடவடிக்கை எடுத்ததுடன், பாதிக்கப்பட்ட வேளாண் பெருமக்களுக்கு ஏறக்குறைய 186 கோடி ரூபாய் நிவாரணமும் வழங்கி சாதனை படைத்துள்ளது. இந்த ஆண்டு, தமிழ்நாடு முழுவதும் மக்காச்சோளம் பயிர் செய்துள்ள நிலங்களில் உள்ள அமெரிக்கன் படைப் புழுத் தாக்குதலைத் தடுப்பதற்காக அரசே அதற்கான மருந்தை தெளித்து, விவசாயிகள் அதிக விளைச்சல் பெற வழிவகை செய்த அரசு அம்மாவின் அரசு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அகில இந்திய அளவில் ஒப்பந்த சாகுபடி முறைக்கென்று, பிரத்யேகமாக எந்த சட்டமும், எந்த மாநிலத்திலும் இதுவரை இயற்றப்படாத நிலையில், தமிழ்நாடு அரசுதான் முதன் முதலில் தனிச் சட்டம் ஒன்றை வடிவமைத்துள்ளது என்பது தனிச்சிறப்பாகும்.

இந்த மாவட்டத்தின் முன்னாள் அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்கள் பல்வேறு தவறான கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார். எனவே, இந்த நேரத்தில் தென்பெண்ணையாற்று பாசன விவசாய பெருமக்களின் உரிமையை நிலைநாட்ட மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வரும் நடவடிக்கையைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.

கர்நாடக அரசு, மார்கண்டேய நதியில் அணை கட்டுவதற்காக கட்டுமானப் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டதால், அதனை தடுத்து நிறுத்தக் கோரி 3.7.2019 அன்று ஓர் இடைக்கால மனு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் அனுபவம் வாய்ந்த மூத்த வழக்கறிஞர் மூலம் திறமையான வாதங்கள் எடுத்து வைக்கப்பட்டது. எனினும், உச்சநீதிமன்றம் 14.11.2019 அன்று வழங்கிய தீர்ப்பில், தமிழ்நாட்டின் இடைக்கால மனுவை ஏற்றுக்கொள்ளாமல் இப்பிரச்சனைக்கு தீர்வு காண ஒரு நடுவர் மன்றத்தை அமைக்க மத்திய அரசை 4 வார காலத்திற்குள் அணுகுமாறு உத்தரவிட்டுள்ளது. தமிழ்நாடு அரசு தொடர்ந்த அசல் வழக்கு இன்னும் நிலுவையில் தான் உள்ளது. இதன் அடுத்த கட்ட விசாரணை 10.1.2020 அன்று எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. உச்ச நீதிமன்றம் தென்பெண்ணையாறு பிரச்சனையில் 14.11.2019 அன்று வழங்கிய தீர்ப்பின் மீது சட்ட வல்லுனர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு, அவர்களிடமிருந்து

ஆலோசனை பெறப்பட்டவுடன் தென்பெண்ணையாற்று நீரினை சார்ந்துள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் நலனை பாதுகாக்கவும், தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்டவும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொள்ளும்.

இதுமட்டுமல்லாமல், மத்திய அரசினால் கொண்டு வரப்பட இருந்த அணை பாதுகாப்பு சட்ட மசோதாவில் தமிழகத்தின் நீராதார உரிமைகளை பாதிக்கும் அம்சங்கள் இருந்ததாலும், அதனால் தமிழ்நாட்டில் வேளாண் பெருங்குடி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதனாலும் அச்சட்ட மசோதாவினை தமிழ்நாட்டின் உரிமைகளுக்கு எந்தவித பாதிப்பும் இன்றி மட்டுமே இயற்றப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி சமீபத்தில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர்கள் புதுதில்லிக்குச் சென்று மத்திய நீர்வளத் துறை அமைச்சரை நேரடியாகச் சந்தித்து வேண்டுகோள் வைத்ததன் அடிப்படையில் அச்சட்ட மசோதா தற்போது பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யாமல் தள்ளி வைக்கப்பட்டுள்ளது என்பதனை இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளின் உணர்வுகளை நன்கு உணர்ந்த ஒரு விவசாயியின் தலைமையிலான அரசால், விவசாயிகளுக்காக இது போன்ற பல்வேறு வளர்ச்சித் திட்டங்களும், வேளாண் பெருமக்களின் உரிமைகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இங்கே பெருமையுடன் கூறிக் கொள்கிறேன்.

இன்று நடைபெறும் இந்த விழாவில், கருவூலம், சுகாதாரம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளின் சார்பில் 37 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 176 கட்டடங்களை நான் திறந்து வைத்துள்ளேன். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 19.68 கோடி ரூபாய் மதிப்பிலான 39 பணிகள் உட்பட மொத்தம் 27 கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள 43 பணிகளுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். அதே போல, 7,977 பயனாளிகளுக்கு 94.37 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை இன்று என்னால் வழங்கப்பட்டுள்ளன.

ஒருமுறை பயன்படுத்தக்கூடிய நெகிழியை தடை செய்து, அதனை நடைமுறைப்படுத்தி வருகிறது மாண்புமிகு அம்மாவின் அரசு. வருங்கால சந்ததியினரின் நலனை கருத்தில் கொண்டும், அவர்களின் சுகாதாரமான வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையிலும், இதை முழுமையாக கடைபிடிக்க வேண்டும் என்று உங்கள் அனைவரையும் எல்லாம் இந்த நேரத்தில் நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுமக்களின் நலனில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் அரசியலுக்கு அப்பாற்பட்டு மாண்புமிகு அம்மாவின் அரசின் செயல்பாடுகளை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் நலனை

நினைத்து செயல்படும் ஒரு நாட்டில், அனைத்து வளங்களும் ஒருசேர இருக்கும் என்று ஆன்றோர்கள் கூறுவார்கள்.

அதை நினைக்கும்போது மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு விழாவில் எடுத்துரைத்த கதை ஒன்று என் நினைவுக்கு வருகிறது.

ஓர் அரசர் மிகவும் நேர்மையாக ஆட்சி நடத்தி வந்தார். அவருடைய நாடு எல்லா வளங்களோடு சிறப்பாக இருந்தது. ஒரு நாள் இரவு அரசர் தமது நாட்டின் கோட்டையை சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அரண்மனைக்குள் இருந்து ஒரு பெண் வெளியே போவது தெரிந்தது. "அம்மா நீங்கள் யார் ? இந்த நள்ளிரவு நேரத்தில் ஏன் வெளியே போகிறீர்கள் ?'' என்று கேட்டார். அந்தப் பெண் சொன்னாள். ''நான்தான் திருமகள். மகாலட்சுமி ஆகிய நான், ஒரே இடத்தில் நிரந்தரமாக இருப்பதில்லை. இங்கே தங்கி, நீண்ட நாட்கள் ஆகிவிட்டது. ஆகவே இப்போது வெளியே போகிறேன்'' என்று மகாலட்சுமி சொன்னதும், "சரி உங்கள் விருப்பம் தாயே; நீங்கள் போகலாம்'', என்று மன்னர் சொல்லி விட்டார். சிறிது நேரம் கழித்து இன்னொரு பெண் அரண்மணையை விட்டு வெளியே வந்து கொண்டிருந்தாள். ''அம்மா நீங்கள் யார் ?'' என்று மன்னர் கேட்டார். ''நான் கலைமகள். திருமகள் இல்லாத இடத்தில் நான் இருக்க இயலாது. ஆகவே நான் போகிறேன்" என்று கலைமகள் சொல்லவும். ''சரி தாயே சென்று வாருங்கள்'' என்று மன்னர் சொல்லி விட்டார். இன்னும் சிறிது நேரத்தில் மூன்றாவது பெண் வெளியேறிக் கொண்டிருந்தாள். ''அம்மா நீங்கள் யார் ? எங்கே போகிறீர்கள்" என்று மன்னர் கேட்டார். ''நான் தான் மலைமகள். எப்போது திருமகளும், கலைமகளும் வெளியேறி விட்டார்களோ, அப்போது இந்த அரண்மணையில் வீரத் திருமகளான எனக்கு என்ன வேலை?" என்று கூறி வெளியேறி விட்டாள். சிறிது நேரம் கழித்து நான்காவதாக ஒரு பெண் வெளியேறிக் கொண்டிருந்தாள் ''அம்மா நீங்கள் யார் ?'' என்று கேட்டார் மன்னர். ''நான்தான் தர்ம தேவதை'' என்றாள் அந்தப் பெண். உடனே அரசர் அந்தப் பெண்ணின் காலில் விழுந்து, "தாயே! யார் போனாலும் போகட்டும், நீங்கள் போகக் கூடாது. தர்மம் வெளியேறிவிட்டால் என் சாம்ராஜ்யம் அழிந்து போகும். ஆகவே நீங்கள் மட்டும் இங்கேயே தங்கி விடவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார், சரி என்று சொல்லிவிட்டு தர்ம தேவதை அரண்மனைக்குள் சென்று விட்டாள். சிறிது நேரத்தில் வெளியே போன மலைமகள், "தர்மம் உள்ள இடத்தை விட்டுவிட்டு வெளியே இருக்க முடியாது; ஆகவே வந்து விட்டேன்'' என்று அரண்மனைக்குள் போய்விட்டாள். அவளைத் தொடர்ந்து கலைமகளும் ''உண்மையும், நீதியும் இருக்கும் இடத்தில்தான் நானும் இருப்பேன்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்து விட்டாள். ''அரசே! எங்கே உண்மை இருக்கின்றதோ, எங்கே தர்மம் இருக்கின்றதோ, எங்கே நீதி இருக்கின்றதோ, அங்கு தான் நான் இருப்பேன். இவை இல்லாத இடம், தீயவர்களின் வேட்டைக் காடாகிவிடும். ஆகவேதான், நானும்

இங்கேயே வந்து விட்டேன்'' என்று திருமகள் சொன்னாள். சத்தியம் எங்கு வாழ்கிறதோ அங்கு அனைத்து வளங்களும் தானாகவே வந்து சேரும்.

சத்தியத்தாய் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழித்தோன்றலாய் உண்மையின் வழியில் நடக்கும் இந்த ஆட்சியில், மக்களுக்கு அனைத்து வளங்களும் தானாகவே வந்து சேரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா வழியிலே அம்மாவினுடைய அரசு செயல்படுகின்ற விதமாக இன்றைக்கு, கிராமத்திலிருந்து நகரம் வரை ஏழை, எளிய மக்களின் பிரச்சினைகளை தீர்க்கவேண்டும் என்பதற்காக முதலமைச்சர் சிறப்புக் குறைதீர்க்கும் திட்டம் என்ற ஒரு அறிவிப்பை நான் அறிவித்தேன். அந்த அறிவிப்பின் மூலமாக மாவட்டந்தோறும் மனுக்கள் வாங்கப்பட்டன. அதன் விவரத்தை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

மாநிலம் முழுவதும் **9,72,216** மனுக்கள் பெறப்பட்டன. அதில் **5,11,186** மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. **23,538** மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்றுக்கொள்ளப்படாத **4,37,492** மனுக்களை மீண்டும் பரிசீலனை செய்து அதில் தகுதியான மனுக்கள் இருந்தால் அவற்றின் மீதும் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளோம். ஏழை, எளிய மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமென்பதற்காக, எங்களுடைய அதிகாரிகளே நேரடியாகச் சென்று முதலமைச்சர் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டம் என்ற திட்டத்தின் மூலமாக மனுக்களைப் பெற்று, தகுதியான மனுக்கள் அனைத்திற்கும் தீர்வு காணுகின்ற ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதை நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றோம்.

உழைக்க முடியாத, வயது முதிர்ந்த முதியோர்களுக்கு இந்த ஓராண்டில் மட்டும் **5** லட்சம் நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பைக் கொடுத்து, தமிழ்நாடு முழுவதும் முதியோர் கொடுக்கின்ற மனுக்களை ஆராய்ந்து, தகுதியான **5** லட்சம் முதியோர்களுக்கு ரூ.**1,000** உதவித் தொகையாக கிடைக்கக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு நிகழ்த்திக் கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு அரிசி குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு ரூ.**1,000** பொங்கல் பரிசு வழங்கப்படும் என்ற அறிவிப்பைக் கொடுத்து, அதை நிறைவேற்றிய அரசு அம்மாவினுடைய அரசு. அதே வழியில், இந்த ஆண்டு சுமார் **2** கோடியே **5** லட்சம் அரிசி குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு ரூ. **1,000** தைப் பொங்கல் பரிசு வழங்கப்படும் என்ற அறிவிப்பை நான் ஏற்கனவே கள்ளக்குறிச்சி மாவட்ட தொடக்க விழாவில் அறிவித்தேன். அந்த நிகழ்ச்சி, முதற்கட்டமாக நாளை, சென்னை கோட்டையில் தொடங்க இருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். தைப்

பொங்கல் பரிசாக 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, கரும்பு, முந்திரி, திராட்சை, ஏலக்காய் போன்ற பரிசுப் பொருட்களும் அதோடு சேர்த்து வழங்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். அதேபோல, நிறைய திட்டங்களை அம்மாவின் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் தாலுகாவில் ஜவ்வாது மலையில் 42 கிராமங்கள் அமைந்துள்ளன. இம்மலை கிராமத்தில் வாழும் மலைவாழ் மக்களின் கல்வி, மருத்துவம் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த திருப்பத்தூர் நகரை இணைக்கும் மட்றப்பள்ளி, புதூர்நாடு சாலை பெரும்பங்கு வகிக்கின்றது. திருப்பத்தூர் சிங்காரப்பேட்டை சாலை, எஸ்.எச் 18 ஏ கிலோமீட்டர் 7/8—ல் பிரிந்து செல்லும் மட்றப்பள்ளி—புதூர்நாடு சாலை கிலோமீட்டர் 0/0—லிருந்து 20/930 சாலை 3.75 கிலோ மீட்டர் அகலமுள்ள மாவட்ட நகர சாலையாகும். இச்சாலை கிலோமீட்டர் 0/0—லிருந்து 8/0 வரை சமதள சாலையாகும். கிலோமீட்டர் 8/0—லிருந்து 20/930 வரை மலைச் சாலையாக உள்ளது. புதூர்நாடு கிராமம் வழியாக நெடுவாசல், சிங்காரப்பேட்டை வரை வனச்சாலை அமைந்துள்ளது. இவ்விரண்டு சாலைகள் வழியாக மலைவாழ் மக்கள் திருப்பத்தூர் மற்றும் சிங்காரப்பேட்டை அடைய, விவசாய விளைபொருட்களை சந்தைப்படுத்த, கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளைப் பெற்று தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்கின்றனர். இந்த சாலையை விரைந்து அம்மாவினுடைய அரசால் ரூ.25 கோடி மதிப்பீட்டில் சீர்செய்யப்படும் என்ற அறிவிப்பை இந்த நேரத்தில் வெளியிட விரும்புகின்றேன்.

உங்கள் மாவட்ட மாண்புமிகு அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் கேட்டுக் கொண்ட இந்தத் திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. சேலம், திருப்பத்தூர், வாணியம்பாடி தேசிய நெடுஞ்சாலை ஏ.பள்ளிப்பட்டி முதல் அரூர் வழியாக ஊத்தங்கரை வரையுள்ள 44 கிலோமீட்டர் நீளச் சாலையை இருவழிச் சாலையிலிருந்து நான்கு வழிச்சாலையாக தரம் உயர்த்த சுமார் ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு முதற்கட்டப் பணி துவங்கப்பட்டு விட்டது. இதன் தொடர்ச்சியாக, ஊத்தங்கரை முதல் திருப்பத்தூர் வழியாக வாணியம்பாடி வரையிலுள்ள 45 கிலோமீட்டர் நீளச் சாலையை இருவழிச் சாலையிலிருந்து நான்கு வழிச்சாலையாக சுமார் ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்துவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது, அனுமதி கிடைத்தவுடன் இந்தச் சாலை விரிவுபடுத்தி சீர்செய்யப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**இப்புதிய மாவட்டத்தின் வளர்ச்சிக்காக சில அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.**

திருப்பத்தூர் வட்டம், இருனாம்பட்டு கிராமம் அருகே 1 கோடியே 96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கப்படும். இதனால் இருணாம்பட்டு மற்றும் ஆசனாம்பட்டு கிராமங்கள் பயன்பெறும்.

ஆம்பூர் வட்டம், வெங்கிலி கிராமம் அருகே பாலாற்றின் குறுக்கே 3.83 கோடி ரூபாய் மதிப்பில் தரைமட்ட தடுப்பு சுவர் அமைக்கப்படும்.

ஆம்பூர் வட்டம், வண்ணான்துறை கிராமம் அருகே கானாற்றின் குறுக்கே 2 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கப்படும்.

இம்மாவட்டத்தில் குடிநீர் பிரச்சனையை தீர்க்க தக்க நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படும்.

ஆம்பூர் அரசு மருத்துவமனையில் புறநோயாளிக்கான மருத்துவ வார்டு, தீவிர சிகிச்சைப் பிரிவு (ICU Unit) 7 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்படும்.

ஆம்பூர் அரசு மருத்துவமனை வளாகத்தில் CEMONC Center 10 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

வாணியம்பாடி அரசு மருத்துவமனை வளாகத்தில் CEMONC Center 10 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

வாணியம்பாடியில் தோல் பதனிடும் தொழிலை மேம்படுத்திட புதிய பல்நோக்கு திறன் மேம்பாட்டு மையம் (Skill Development Center) கட்டப்படும்.

திருப்பத்தூர், ஏலகிரி மலையில் ஒரு புதிய உள் விளையாட்டு அரங்கம் கட்டப்படும்.

ஏலகிரியில் 50 லட்சம் ரூபாய் மதிப்பில் தாவரவியல் பூங்கா அமைக்கப்படும்.

நான் அறிவித்த அனைத்து அறிவிப்புகளும் உங்கள் மாவட்டத்தின் வளர்ச்சிக்கான அறிவிப்புகள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரே ஆண்டில் 5 புதிய மாவட்டங்களைத் தோற்றுவித்தப் பெருமை அம்மாவின் அரசைச் சாரும். அதுமட்டுமல்ல, இதுவரை, தமிழக வரலாற்றில் ஒரே நாளில் இரண்டு மாவட்டங்களைத் தொடங்கிய வரலாறு கிடையாது, அந்த வரலாற்றுச் சாதனையைப் படைத்த அரசு அம்மாவின் அரசு தான். இவ்வாறு புதிய மாவட்டங்கள் பிரிக்கப்பட்டதன் விளைவாக மாவட்ட நிர்வாகம் சிறப்பாக செயல்படுவதற்கு ஏதுவாக இருக்கும்.

இயற்கை எழில் வாய்ந்த மலை சூழ்ந்த, குளு, குளுவென்ற சீதோஷண நிலையில் இன்று புதியதாக திருப்பத்தூர் மாவட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த மாவட்டம் விரைந்து உதயமாவதற்கு உறுதுணையாக இருந்ததற்கும், இந்த நிகழ்ச்சியை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**